# ஆவடி சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளர் ஆவடி சா.மு.நாசர் வாக்குசேகரிப்பு!



## சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி சார்பில் எண்.06, ஆவடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஆவடி சா.மு.நாசர் வாக்குச் சேகரிக்கும் நிகழ்ச்சி விவரம்.

**தேதி : 20.04.2026 (திங்கள்கிழமை)**

| வாக்குசேகரிக்கும் நேரம்/ இடம் | வட்ட கழகச் செயலாளர்கள் | ஏற்பாடு |
|---|---|---|
| காலை 7.00 மணி<br>கிறிஸ்துவ தேவாலயங்களின் நிர்வாகிகள் கூட்டமைப்பு சந்திப்பு | | |
| காலை 11.30 மணி<br>கிறிஸ்துவ தேவாலயங்களின் நிர்வாகிகள் கூட்டமைப்பு சந்திப்பு<br>இடம் : Dr.அம்பேத்கர் சிலை 2வது வலது 13 அன்னை சத்யா நகர் | | |
| மாலை 3.30 மணி | நாராயண பிரசாத் (ஆவடி வடக்கு பகுதி) | |
| மாலை 4.00 மணி | பொன் விஜயன் (ஆவடி மேற்கு பகுதி) | |
| மாலை 4.30 மணி | தேசிங்கு (நடுக்குத்தகை) | |
| மாலை 5.00 மணி | தி.வை.ரவி (திருநின்றவூர் நகரம்) | |
| மாலை 5.30 மணி | பேபி சேகர் (ஆவடி கிழக்கு பகுதி) | |
| மாலை 6.00 மணி | NEK மூர்த்தி (திருவேற்காடு நகரம்) | |
| மாலை 6.00 மணி<br>பொது நலச்சங்க நிர்வாகிகள் சந்திப்பு<br>இடம்: திருவேற்காடு | | என்.இ.கே.மூர்த்தி (நகர செயலாளர்) |

தேர்தல் பணிக்குழு - **ஆவடி சட்டமன்றத் தொகுதி**

# திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் - கழக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் வாக்கு சேகரிப்பு!

## சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026




தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி சார்பில் எண்.04, திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் வாக்குச் சேகரிக்கும் நிகழ்ச்சி விவரம்.

**தேதி : 20.04.2026 - திங்கட் கிழமை**

| வ. எண் | இடம் | நேரம் |
|---|---|---|
| **திருவாலங்காடு மேற்கு** | | |
| 1. | அரும்பாக்கம் | காலை 08.00 மணி |
| 2. | தன்ராஜ்கண்டிகை | காலை 08.20 மணி |
| 3. | ஆற்காடுகுப்பம் | காலை 08.50 மணி |
| 4. | நாபளூர் | காலை 09.00 மணி |
| 5. | குன்னத்தூர் | காலை 09.10 மணி |
| 6. | இலட்சுமாபுரம் | காலை 09.20 மணி |
| 7. | தாஸ்ரெட்டிகண்டிகை | காலை 09.30 மணி |
| 8. | சொட்டநத்தம் | காலை 09.45 மணி |
| 9. | கனகம்மாசத்திரம் | காலை 10.00 மணி |
| 10. | வி.ஜி.கே.புரம் | காலை 10.30. மணி |
| **பூண்டி மேற்கு ஒன்றியம்** | | |
| 1. | பூண்டி | மாலை 04.00 மணி |
| 2. | நெய்வேலி | மாலை 05.00 மணி |
| 3. | சென்றாயன்பாளையம் கிரீன்வேல்நத்தம் | மாலை 06.00 மணி |
| 4. | வள்ளியம்மாபேட்டை | இரவு 07.00 மணி |
| 5. | இராமஞ்சேரி | இரவு 08.00 மணி முதல் 10.00 மணி வரை |
| 6. | பாண்டூர் | இரவு 08.15 மணிமுதல் 10.00 மணி வரை |

தேர்தல் பணிக்குழு - **திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதி**



இராயபுரம் மேற்குப் பகுதி – "53வது" வட்டத்தில் கழக வேட்பாளர் டாக்டர் அ.சுபேர்கான் வீடு வீடாக தீவிர வாக்கு சேகரித்தார். அவருக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

### மா.சுப்பிரமணியன் சாதனைகளைச் சொல்லி வாக்குச் சேகரிப்பு –

# சைதாப்பேட்டையில் - வட்டங்கள் வாரியாக வாகனப் பிரச்சாரம்!

## பொதுமக்கள் மகிழ்ச்சி பொங்க வரவேற்பு!

சென்னை, ஏப்.20-

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் நேற்று (19-.4-.2026) சைதை மேற்குப் பகுதியில் வட்டங்கள் வாரியாக வாகனத்தில் திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கிக் கூறி வாக்குச் சேகரித்தார்.



காலை 8 மணிக்கு 142வது வட்டம் திடீர்நகரில் வட்டச் செயலாளர் எம்.நாகா தலைமையிலும், காலை 8.30 மணிக்கு 139 'அ' வட்டம் வி.எஸ்.எம். கார்டனில் வட்டச் செயலாளர் சை.மு.சேகர் தலைமையிலும், காலை 9 மணியளவில் 139வது வட்டம் எத்திராஜ் நகரில் வட்ட கழக செயலாளர் அட்கோ கமலநாதன் தலைமையிலும், காலை 9.30 மணியளவில் 142 'அ' வட்டம் பிள்ளையார் கோயில் தெருவில் வட்டச் செயலாளர் எஸ்.பி.கோதண்டம் தலைமையிலும், காலை 10 மணிக்கு 140 'அ' வட்டம் ரெட்டிக்குப்பம் சாலையில் வட்டச் செயலாளர் ந.தமிழரசு தலைமையிலும், காலை 10.30 மணிக்கு 140வது வட்டம் புஷ்பாவதி அம்மன் கோயில் தெருவில் வட்டச் செயலாளர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் தலைமையிலும் சாதனைகளைச் சொல்லி வாக்குச் சேகரித்தார்.

அப்போது பொதுமக்கள் மிகுந்த வரவேற்பை, மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்தினர்.

இந்த வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, தொகுதிப் பார்வையாளர் சைதை சாதிக் ஆகியோர் உடன் சென்றனர்.

### அண்ணல் அம்பேத்கரின் சட்டம் இருக்கும் வரை

# பா.ஜ.க.வின் முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெறாது!

### புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா உறுதி !

புதுச்சேரி, ஏப். 20-

அண்ணல் அம்பேத்கர் இயற்றிய சட்டம் இருக்கும் வரை மாநில உரிமைகளைப் பறிக்கின்ற எந்த சட்டங்களை இயற்ற பாஜக முயற்சி செய்தாலும் அது ஒருபோதும் வெற்றி பெறாது என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா உறுதிபட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

"பூனைகளால் எலிகளுக்கு பாதுகாப்பு உண்டோ?" - தந்தை பெரியாரின் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கேள்வி, இன்றைய இந்திய ஒன்றிய அரசின் செயல்பாடுகளுக்கு மிகப் பொருத்தமாக அமைகிறது. வேட்டைக்காரர்களே பாதுகாப்பு வழங்குவதாகக் கூறுவது எத்தகைய முரண் என்பதை தற்போதைய அரசியல் சூழல் நமக்கு உணர்த்துகிறது.

14% முதல் 33% வரையிலான பெண்களின் இட ஒதுக்கீடு பாஜகவின் கண் துடைப்பு அரசியல் நாடகம் ஆகும். தற்போதுள்ள 543 நாடாளுமன்ற உறுப்பினர்களில் வெறும் 75 பெண் உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். இது மொத்த விகிதாசாரத்தில் வெறும் 14% மட்டுமே. இருக்கும் இடங்களிலேயே 33% இடஒதுக்கீட்டை உடனடியாக உறுதி செய்ய இந்த அரசுக்குத் துணிவில்லை. மாறாக, தொகுதி மறுசீரமைப்பு (DE LIMITATION) என்ற பெயரில், மாநிலங்களின் மக்கள் தொகையை கணக்கில் வைத்து இடங்களை அதிகரித்து, அதன் பிறகு இடஒதுக்கீடு வழங்குவோம் என்பது ஆதிக்கவாதிகளின் மோசடித் திட்டம். இது பெண்களின் உரிமையை வழங்காமல் காலங்கடத்தும் தந்திரம் மட்டுமல்லாது, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தென் மாநிலங்களின் அரசியல் பலத்தைக் குறைக்கும் ஒரு சதியுமாகும்.

இந்தியாவில் எப்போதெல்லாம் ஜனநாயகத்தின் குரல்வளை நெறிக்கப்படுகிறதோ, அப்போதெல்லாம் அதைத் தடுத்து நிறுத்த எழும் முதல் குரல் திராவிடப் பேராசான்களுக்குப் பிறகு, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களுடையதாகத்தான் இருக்கிறது. பாசிசத்தை வேரறுக்கும் ஆற்றல் என்பது திராவிட இனத்திற்கே உரிய மரபாகும்.

தென்னிந்திய மாநிலங்களின் உரிமைகளுக்காகவும், கூட்டாட்சித் தத்துவத்தைக் காக்கவும், வேற்றுமையில் ஒற்றுமை



காண அவர் முன்னெடுக்கும் முயற்சிகள் இன்று தேசிய அளவில் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளன. எதேச்சதிகாரத்தினையும் சர்வாதிகாரத்தையும் முறியடிக்கும் ஜனநாயகத்தின் பாதுகாப்பு அரணாக அவர் விளங்குகிறார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கருப்பு உடை அணிந்து வந்ததைப் பார்த்து, "திருஷ்டி கழிப்பது போல் இருக்கிறது" எனப் பிரதமர் கூறியது அவரின் பிரிவினைவாதப் போக்கைக் காட்டியது. இதற்குப் பதிலடி கொடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் "கருப்பு என்பது அன்னை காளியின் நிறம்; அது பெண்ணின் சக்தி. அகந்தை, ஆணவம் மற்றும் அறியாமையை அழிக்கும் நிறம் அது," என்று மிக வலிமையாகப் பதிவு செய்தார். திராவிட இயக்கத்தின் அடையாளமான கருப்பு, அதிகார வர்க்கத்தின் அறியாமையைச் சுட்டெரிக்கும் நெருப்பு என்பதை இது மீண்டும் நிரூபித்துள்ளது.

பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு மசோதாவை தனியாக தாக்கல் செய்யாமல், தொகுதி மறு சீரமைப்பு வரையறையுடன் இணைத்திருப்பது திட்டமிட்ட சதிச்செயல். 33% இடஒதுக்கீடு தடையாவதற்கு எதிர்க்கட்சிகள் தான் காரணம் என்று பொய்ப் பிரச்சாரம் செய்யும் பாஜகவினருக்கு, இந்தத் தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். மாநில உரிமைகளைப் பறித்து, குரலற்றவர்களின் மன்றமாக நாடாளுமன்றத்தை மாற்றத் துடிக்கும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெறாது.

எத்தகைய அடக்குமுறைகள் வந்தாலும், ஒடுக்கப்பட்டோரின் பாதுகாப்புக் கவசமாக விளங்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை நமக்குத் தந்த சமூக நீதிப் போர்வாள் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்குப் புகழஞ்சலியையும் வாழ்த்துகளையும் சமர்ப்பிக்கிறோம். அவரின் சட்டம் இருக்கும் வரை, பாசிச சக்திகள் வீழ்த்தப்படுவது உறுதி!

இவ்வாறு புதுச்சேரி மாநிலம் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, எம்.எல்.ஏ. குறிப்பிட்டுள்ளார்.

# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வீதி வீதியாக வாக்கு சேகரிப்பு!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதி, திருவல்லிக்கேணி பகுதி, 119, 119அ, 120 மற்றும் 120அ ஆகிய வட்டங்களில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 20.04.2026 - திங்கள் கிழமை மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை கழக நிர்வாகிகளுடன் வீடு வீடாகச் சென்று துண்டறிக்கைகள் கொடுத்து, உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்கும்படி வாக்கு சேகரிக்கிறார். இப்பிரச்சார நிகழ்ச்சியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, பகுதி செயலாளர் ஏஆர்பி.எம்.காமராஜ், தொகுதி பார்வையாளர் சி.எச்.சேகர், வட்டக்கழக செயலாளர்கள் க,வே,மோகன், லைனர் கே.பிரபு, ICF எம்.சங்கர் மற்றும் என்.ரவி ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். வாக்கு சேகரிக்கும் தெருக்களின் விவரம் பின்வருமாறு:-

**நாள்: 20.04.2026 - திங்கள் கிழமை**

**நேரம்: மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை - திறந்த ஆட்டோவில் பிரச்சாரம்**

**வட்டம்: 120அ**

| எண் | தெருவின் பெயர் |
|---|---|
| 1) | நடுக்குப்பம் 1 முதல் 8 தெருக்கள் (துவங்கும் இடம்) |
| 2) | நீலம் பாட்ஷா தர்கா தெரு |
| 3) | வி.ஆர். பிள்ளை தெரு |
| 4) | முனுசாமி நகர் |
| 5) | கஜபதி தெரு |
| 6) | ராம் நகர் 1 முதல் 10 தெருக்கள் (பிரச்சாரம் முடியும் இடம்) |

**வட்டம்: 120**

| எண் | தெருவின் பெயர் |
|---|---|
| 1) | வெங்கடசாமி தெரு (துவங்கும் இடம்) |
| 2) | இ டிப்போ தெரு |
| 3) | வெங்கடேசபுரம் |
| 4) | நடேசன் சாலை |
| 5) | யானைகுளம் 2 முதல் 6 வரை |
| 6) | ஜவகர் உசேன் 1 முதல் 8 வரை |
| 7) | பெரிய மலையப்பன் தெரு (வழி) |
| 8) | செல்லம்மாள் தோட்டம் |
| 9) | சுதந்திரா நகர் (முடியும் இடம்) |

**வட்டம்: 119, 119அ**

| எண் | தெருவின் பெயர் |
|---|---|
| 1) | மாவடி விநாயகர் கோயில் தெரு (புறப்படும் இடம்) |
| 2) | பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தல் |
| 3) | வி. எம். தெரு சந்திப்பு |
| 4) | சைவ முத்தையா தெரு 2, 5, 1 வரை |
| 5) | ராமராவ் கார்டன் |
| 6) | அனுமந்த் ரோடு |
| 7) | பாலாஜி நகர் |
| 8) | அ.தி.மு.க. அலுவலகம் ரோடு |
| 9) | பொன்னுசாமி ஹோட்டல் ரோடு |
| 10) | மேயர் சிவராஜ் ரோடு |
| 11) | நல்லண்ணன் ரோடு |
| 12) | அம்பேத்கர் நகர் |
| 13) | ஐய்யம் பெருமாள் தெரு |
| 14) | பூரம் பிரகாஷம் தெரு (வழி வி.எம். தெரு) |
| 15) | பேகம் தெரு |
| 16) | பேகம் மெயின் ரோடு (பிரச்சாரம் முடிவு) |

**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.